செ.வெ.எண்.51/2021 நாள்: 23.03.2021

**80 வயதுக்கு மேற்பட்டவர்கள் தபால் வாக்கு பதிவு செய்ய படிவம் வழங்கப்பட்டு வருகிறது - மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.அரவிந்த், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.அரவிந்த், இ.ஆ.ப., அவர்கள், நடைபெறவுள்ள கன்னியாகுமரி பாராளுமன்ற இடைத்தேர்தல் - 2021 மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2021 குறித்து இன்று (23.03.2021) செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்:-

கன்னியாகுமரி பாராளுமன்ற இடைத்தேர்தல் மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2021 முன்னிட்டு, ஏப்ரல் மாதம் 6-ஆம் தேதி, கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட ஆறு சட்டமன்ற தொகுதிகள் மற்றும் கன்னியாகுமரி பாராளுமன்றத்திற்கான இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது. இத்தொகுதிகளுக்கான வேட்பு மனுக்கள் மார்ச் 19-ஆம் தேதி மாலை வரை பெறப்பட்டது.

கன்னியாகுமரி பாராளுமன்ற இடைத்தேர்தலில் மொத்தம் 23 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதில், 10 வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டது. 13 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதில் 1 வேட்பாளர் வேட்புமனு திரும்பபெறப்பட்டதன் அடிப்படையில், மொத்தம் 12 வேட்பாளர்கள் கன்னியாகுமரி பாராளுமன்ற இடைத்தேர்தலில் போட்டியிட உள்ளனர். மேலும், கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதியில் 22 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதில், 7 வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டு, 14 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவற்றில் 1 வேட்பாளர் தனது வேட்புமனுவை திரும்பபெறப்பட்டதை தொடர்ந்து, மொத்தம் 13 வேட்பாளர்கள் கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதியில் போட்டியிட உள்ளனர். நாகர்கோவில் சட்டமன்ற தொகுதியில் 28 வேட்பாளர்கள் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதில், 11 வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டது. 17 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதில், 2 வேட்பாளர்கள் தங்களது வேட்புமனுவை திரும்ப பெறப்பட்டதன் அடிப்படையில், மொத்தம் 15 வேட்பாளர்கள் நாகர்கோவில் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட உள்ளனர். குளச்சல் சட்டமன்ற தொகுதியில் 15 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதில், 2 வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டு, 13 வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதில் 1 வேட்பாளர் தனது வேட்புமனு திரும்பபெறப்பட்டதன் அடிப்படையில், மொத்தம் 12 வேட்பாளர்கள் குளச்சல் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட உள்ளனர். பத்மநாபபுரம் சட்டமன்ற தொகுதியில் 22 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதில், 8 வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டது. 14 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதில் 2 வேட்பாளர்கள் தங்களது வேட்புமனுக்களை திரும்ப பெறப்பட்டதன் அடிப்படையில், மொத்தம் 12 வேட்பாளர்கள் பத்மநாபபுரம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட உள்ளனர். விளவங்கோடு சட்டமன்ற தொகுதியில் 17 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதில், 17 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதில் 2 வேட்பாளர்கள் தங்களது வேட்பு மனுக்களை திரும்ப பெறப்பட்டதன் அடிப்படையில், மொத்தம் 15 வேட்பாளர்கள் விளவங்கோடு சட்டமன்ற தொகுதியில் போட்டியிட உள்ளனர். கிள்ளியூர் சட்டமன்ற தொகுதியில் 16 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதில், 2 வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டது. மீதமுள்ள 14 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில், மொத்தம் 14 வேட்பாளர்கள் கிள்ளியூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட உள்ளனர்.

கன்னியாகுமரி பாராளுமன்ற தொகுதி இடைத்தேர்தல் மற்றும் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிகளுக்கும் 3 பறக்கும் படை(Flying Squad) குழுக்கள் வீதம் 6 சட்டமன்ற தொகுதிகளுக்கு 18 குழுக்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும், ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கு 3 கண்காணிப்பு படை(Static Surveillance Team) குழுக்கள் வீதம் 6 சட்டமன்ற தொகுதிகளுக்கு 18 குழுக்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் 1 Video Viewing Team வீதம் 6 சட்டமன்ற தொகுதிகளுக்கு 6 குழுக்களும், ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் 1 Accounting Team என 6 சட்டமன்ற தொகுதிகளுக்கு 6 குழுக்களும்,

ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் 1 Video Surveillance Team என 6 சட்டமன்ற தொகுதிகளுக்கு 6 குழுக்களும் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், 6 சட்டமன்ற தொகுதிகள் மற்றும் கன்னியாகுமரி பாராளுமன்ற தொகுதிக்கு என மொத்தம் 6 தேர்தல் பொது பார்வையாளர்கள், ஒரு காவல் பார்வையாளரும், கன்னியாகுமரி பாராளுமன்ற தொகுதிக்கு 1 செலவின பார்வையாளரும், ஆறு சட்டமன்ற தொகுதிகளுக்கும் 3 செலவின பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் விதிமீறல்கள் குறித்த புகார்களை 1950 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். மேலும், தேர்தல் விதிமீறல்கள் ஏதேனும் இருந்தால், பொதுமக்கள் cVIGIL செயலியை பயன்படுத்தி விதிமீறல்கள் குறித்த புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை பதிவிடலாம். இந்த செயலி மூலம் ஒருவர் எத்தனை புகார்கள் வேண்டுமானாலும் தெரிவிக்கலாம். தேர்தல் விதிமுறைகள் குறித்த புகார்கள் பதிவு செய்யும் பொதுமக்களின் சுய தகவல்கள் ரகசியாக வைக்கப்பட்டிருக்கும். மேலும், கேரள எல்லை பகுதியில் 3 சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு, வாகனங்கள் சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், 80 வயதிற்கு மேல் உள்ளவர்களுக்கு தபால் ஓட்டு போடுவதற்கான படிவம் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 27965 படிவங்கள் 12D வழங்கப்பட்டுள்ளது. இவற்றில், 5381 படிவங்கள் நிரப்பி தரப்பட்டதில், 5227 படிவங்கள் தகுதியுடைவையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கு இந்திய மற்றும் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ள அங்கீகார அட்டைகளை பயன்படுத்தி, 4449 படிவங்கள் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 1795 படிவங்கள் நிரப்பி தரப்பட்டதில், 1701 படிவங்கள் தகுதியுடையவையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் 80 வயதிற்கு மேல் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்ட தபால் ஓட்டுக்களை ஏப்ரல் 1 முதல் ஏப்ரல் 3-ஆம் தேதி வரை மண்டல அதிகாரிகள் வீடு வீடாக சென்று பதிவு செய்யப்பட்ட தபால் ஓட்டுகளை பெற்றுக்கொள்வார்கள். மேலும், அந்த காட்சிகள் முழுவதும் வீடியோவிலும் பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள 10,500 ஊழியர்களுக்கும், 5 ஆயிரம் போலீசாருக்கும் தபால் வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வாக்கு சாவடி நிலை அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட பயிற்சி வருகிற 27-ஆம் தேதி நடைபெறும். அந்த பயிற்சியின்போதே, தபால் வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுநோய் பரவி வருவதால், வாக்காளர்கள் வாக்குப்பதிவு செய்ய வரும்போது முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளியினை கடைபிடித்து வாக்கு பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஒவ்வொரு சோதனைச்சாவடிகளில் வெளியூர் மற்றும் வெளி மாநிலத்திலிருந்து வரும் நபர்களை உடல் வெப்பமாணி மூலம் பரிசோதனை செய்தபின் அவர்களை மாவட்டத்திற்குள் அனுமதிக்கப்படுகின்றனர் என கன்னியாகுமரி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.அரவிந்த், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.ரேவதி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.பா.ஜாண் ஜெகத் பிரைட், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.சி.எ.ரிஷாப், இ.ஆ.ப., துணை ஆட்சியர் (பயிற்சி) திரு.பா.சரவணன், தேர்தல் வட்டாட்சியர் திரு.சேகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.